செ.இ.எண் : 220 நாள் : 13-06-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## இரங்கல் செய்தி – 13.6.2012

சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி திரு. எஸ்.எம். அப்துல் வஹாப் அவர்கள் இன்று (13.6.2012) இயற்கை எய்தினார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

சட்டத் துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, சிறந்த வழக்கறிஞராகவும், சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் பணியாற்றி சிறந்த தீர்ப்புகளை வழங்கி திறம்பட பணியாற்றியவர் நீதியரசர் எஸ்.எம். அப்துல் வஹாப் அவர்கள். சின்னத்திரைக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் குழுவின் தலைவராக சிறப்பாக பணியாற்றியவர் நீதியரசர் எஸ்.எம். அப்துல் வஹாப்.

நீதியரசர் எஸ்.எம். அப்துல் வஹாப் அவர்களின் மறைவு சட்டத் துறைக்கு பேரிழப்பாகும். அன்னாரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், வழக்கறிஞர் பெருமக்களுக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9